மே 25, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய் உன்னையே நீ கேள்: நான் தந்தையை எந்த அளவு நினைவு செய்கின்றேன்? நான் எந்த அளவிற்கு சுய-தரிசன சக்கரத்தை சுழற்றுகின்றேன்? என்னுடைய எத்தனை பாவங்கள் வெட்டபட்டிருக்கின்றன? நான் எவ்வளவு புண்ணிய காரியம் செய்திருக்கின்றேன்? முக்கிய விஷயம் நினைவு செய்வதாகும். உங்கள் தந்தையாகிய என்னை, நினைவு செய்யுங்கள், என் மீது அதிகமான அன்பு கொண்டிருங்கள்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் இது எளிமையான இராஜ யோகம் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன். நான் சுய-தரிசன சக்கரத்தை சுழற்றுவேன். உங்களை நினைவு செய்வது மிகவும் சுலபமாக இருக்கின்றது. பாபா, நீங்கள் எவ்வளவு இனிமையானவர்! நீங்கள் அன்பு கடல் ஆவீர்கள். இது உங்களின் அதிசயம்: நான் உங்களை நினைவு செய்தால், 21பிறவிகளுக்கு ஒருபோழுதும் நோய்வாய் படமாட்டேன். நீங்கள் எனக்கு இந்த உத்தரவாதத்தை அளிக்கின்றீர்கள்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு:ஶ்ரீமத் மிகவும் எளிமையானது. நான் வந்து பாரதத்திற்கு ஶ்ரீமத் கொடுக்கின்றேன். மேலும் அதை அனைத்தையும் விட மிகவும் மேன்மையான பூமி ஆக்குகின்றேன். தந்தை ஒவ்வொரு நாளும் கூறுகின்றார்: குழந்தைகளே, ஶ்ரீமத்தை பின்பற்ற மறக்க வேண்டாம். இது இந்த பிரம்மாவை பற்றிய கேள்வி அல்ல. அந்த ஒருவர் உங்களுக்கு என்ன கூறுகிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அந்த ஒருவர் இவர் மூலமாக ஒரு வழிகாட்டல்களை கொடுக்கின்றார்.

நான் ஏற்றுகொள்ளும் மனோபாவத்தை பின்பற்றுவதில் உறுதியாக இருக்கிறேன். பாபா நிச்சயமாக நீங்கள் எனக்கு எதை கூறினாலும் நான் அதை ஏற்றுக்கொள்வேன். நான் உள்ளுக்குள் என்னைப் பார்த்து சோதித்து பார்பேன்: நான் சத்தோபிரதான் ஆவதற்கு எந்த அளவிற்கு ஶ்ரீமத்தை ஏற்றுக்கொண்டு பின்பற்றுகின்றேன்?

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு:நீங்கள் காட்சிகளை அருளும் ரூபங்களாக, உலகின் விளக்குகளாக இருந்து, ஒரு பார்வையில் பக்தர்களை அப்பால் எடுத்து செல்ல கூடியவர்களாக இருப்பீர்களாக.

நான் முழு உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களும் இந்த கண்களிலிருந்து திருஷ்டி எடுத்துக்கொள்ள காத்திருக்கிறார்கள் என்பதை நான் நினைவில் வைத்திருப்பேன். பாபா மீண்டும் மீண்டும் நான் உலகத்தின் ஒளி என்று என்னிடம் கூறியிருக்கின்றார். உலகத்தின் ஒளியாகிய நான், எனது முழுமை மற்றும் சம்பூர்ண நிலையை அடையும் போது, அதன்பிறகு உலக மாற்றம் நடைபெறும். மேலும் ஒரு பார்வையில் என்னால் ஆத்மாக்களை அப்பால் எடுத்து செல்ல முடியும். நான், ஆத்மாவாகிய நான் காட்சிகளை கொடுப்பவன் ஆவேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.